செய்ததா ? அந்த மாதிரி மீண்டும் நிகழாமல் இருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கள்ள வோட்டுக்கள் அரசாங்கத்திற்குத் தெரிந்து பதிவு செய்யப்படவில்லை. இது அரசாங்கத்திற்குத் தெரியாத் விதத்தில்தான் நடந்திருக்கிறது. இதற்குக் காரணமாக இருக்கக்கூடிய குற்றம் குறைகளை நீக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Jothi Timber and Tile Depot, Vellore

* 338 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 25—3—1959-ல் 997-ம் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி வடஆற்காடு மாவட்டம் வேலூர் ஜோதி மரத்தொட்டி சொந்தக்காரர் மீது போக்குவரத்துக்கு இடையூராக மரத் தொட்டி இருக்கிறதென்று போலிசார் தொடுத்த வழக்கு என்ன வாயிற்று?

(ஆ) அந்த வழக்கின் தீர்ப்பின் முழு விவரமும் மேசைமீது வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Sir, the case ended in acquittal.

(b) The partner of Jothi Timber and Tile Depot was charged before the Sub-Magistrate, Vellore, with having wilfully obstructed the free passage of traffic on the road by keeping logs of wood. The Magistrate held that it was not proved that the logs found in the road belonged to the accused, that there were other timber shops round about and that the logs did not have any marks or signs to show that they belonged to the accused. In the end the Magistrate found the accused not guilty of the charges under the Madras City Police Act and acquitted them under section 245 (1), Criminal Procedure Code.

SRI S. M. ANNAMALAI : இந்த மரங்கள் யாருடையவை என்று 'ப்ருவ்' செய்யப்படவில்லை என்று கனம் அமைச்சர் சொல்லுகிறார். இந்த மரங்கள் இன்னும் ரோடிலேயே இருக்கின்றன. பிரஸ்தாப தீர்ப்பில் கூட, அவை யாருடையவை என்று 'ப்ருவ்' செய்யப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இந்த மரங்களை ஏலம்போட சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த மரங்கள் யாருடையவை என்று ப்ருவ் செய்யப்படவில்லை என்று 'கனம் அமைச்சர்' கூறவில்லை. அவ்வாறு சப்-மாஜிஸ்டிரேட் கூறியிருக்கிறார். மேலும் மறுபடியும் கேஸ் போடப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. என்னிடம் மேற்கொண்டு தகவல் இல்லை.